உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் எ	பிரசோற்பத்தி, புரட்டாசி.	மலர் சு

உ

நான்மொழி நாடு.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

சில திங்களின் முன், நாமக்கல் (சேலம் சில்லாவில் ஒரு தாலூக்கா) போர்டு உயர்தரப் பள்ளிக்கூடத்தில் ஒருசொற் பொழிவு நிகழ்ந்தபொழுது, எனது நண்பரொருவர் நான் மொழிக் கோசர் நாடு என்பதே நாமக்கல் நாடு என ஆயிற்றென்று கூறினர். இப்புதிய செய்தி தெரிந்தவளவில் எனக்குண்டான வியப்பிற்கோரெல்லையில்லை. அதற்காதாரம் தெரிந்துகொள்ள அவா மேலும் மேலும் எழவே, அந்நண்பரை, அதற்குச் சான்று யாது? என வினவ, அவர், திரு. மு. இராகவையங்கார் அவர்கள் வெளியிட்ட சேரன் செங்குட்வேன் என்னும் நூலின் இரண்டாம் பதிப்பின், பக்கம் 108-9 எனத் தெரிவித்தனர்.

இதுபற்றி, அவர்கள் கூறும் சான்றுகொண்டே துருவியதில் கிடைத்த உண்மைகளை இங்கு விளக்க முன்வந்தேன். இனிப் பிறரும் இப்பொருளில் ஏமாந்து போகாவண்ணம் இக் கட்டுரை தொடட்டுமென்பதே யெனது கருத்து. அப்புத்தகத்துட் (சேரன் செங்குட்டுவன்) கூறப்படுவது :—"நாமக்கல் பிரதேசத்துக்கு நான்மோழிநாடு என்ற சாசன வழக்குண்மை புதியதாக அறியப்படுகிறது" என்பதாம்.

நான்மொழிக்சோசர்நாடு என்பதே நாளாவட்டத்தில், நான்மொழிநாடு என்று ஆகி, இப்பொழுது நாமக்கல்நாடு எனவழங்கப்படுகிறது என்பது, அவர்தம் கருத்தாதல் அறியப்படும். அது தவறு என்பதே இங்குக் காட்டப்படுவது. உண்மை காணுமிடத்து நாமக்கல் என்பதற்கும், நான்மொழியென்பதற்கும் ஓரியைபுமே யில்லை. நாமக்கல்லின் பெயர்க் காரணத்தை ஆராயவே இவ்வுண்மை புலனும். நாமக்கல், ஒரு சிறுகுன்று; கி. பி. 600—630 ஆண்டிலிருந்த பல்லவ அரசனுகிய மகேந்திரவர்மனுல், இதன் மேற்குப் பக்கத்திலும், கிழக்குப்பக்கத்திலும் பாறையைக் குடைந்து கட்டின குகைக் கோயில்களையுடையது; அவற்றிலுள்ள சிற்பவேலைக்கும், கதைகளைவிளக்கும் பல படிமங்களின் அமைப்புக்கும் யாவராலும் புகழப்படுவது; இக்கோயில்களிரண்டும் திருமால் தளிகளே; இவற்றிற்கு ஆழ்வார் பாடலில்லையெனினும், திருமாலடியார்களால் அபிமானத்தலமெனக் கொண்டு இவை பெரிதும் போற்றப்படுவன; இத்தளிகள் அதிகேந்திரவிண்ணகரம் என்னப்படும். *

சமய அறிகுறியாகிய நாமம் (திருமண்குறி) இக்குன்றின் பலபக்கங்களிலும் தீட்டப்பட்டிருப்பதால் இது நாமக்கல் எனப் பெயர்பெற்றது. இதன் பழையபெயர் திருஅறைக்கல் என்பதாம். ஒரே பாறையாய் உயர்ந்து குன்றாயிருத்தலால் இது இப்பெயர்பெற்றிருந்தது. (அறை-பாறை. கல்-குன்று)

1906 ஆம் ஆண்டுக் கல்வெட்டின் வருடாந்தத் தெரிவிப்பில் (The Annual Reports of inscriptions for 1906) இக்கோயிற் கல்வெட்டுக்கள் வெளிவந்திருக்கின்றன. † அவற்றுள் 5, 9, 11 இவ்வெண்குறிப்புக்களில், இக்குன்றிற்குத் திருவறைக்கல் என்ற பெயரே குறிக்கப்படுகின்றது.

---

* இவற்றை யன்றிச் சரித்திர சம்பந்தமான ஒரு மலைக்கோட்டையும் இங்குண்டு.

† The Hill is called Thiru varaikkal; Another frogment mentionas [Thiru] varaikkal.

கி. பி, 13ஆம் நூற்ருண்டினதாகக் கருதப்படும் ஷிகல் வெட்டின் எண் 11 இலும், * இப்பெயரே காணப்படுவதால், இற்றைக்கு 700 ஆண்டுகள் வரைக்கும் திருவறைக்கல் என்னும் இப்பெயரே யிதற்கு வழங்கிவந்தமை அறியப்படுகின்றது.

முதலில் திருஅறைக்கல் என வழங்கிவந்த இக்குன்று, பிற சமயத்தார் கவர்ந்துகொள்ளாதபடி, தங்கள் சமயஅறிகுறியாகிய நாமத்தைப் பலபக்கத்திலும் பாகவதர்கள் தீட்ட, அதனல் இது நாமக்கல் எனப் பிற்பட்டகாலத்திலிருந்து வழங்கிவருவதாகல் வேண்டும். வைணவ மதத்தில் ஈடுபாடுடைய விசய நகரத்தரசர், தங்கள் ஆட்சிக்குள் இக்குன்று வந்தபொழுது திருவறைக்கல் என்னும் பெயரினும் திருநாமக்கல் என்னும் இப்பெயரே சிறந்ததெனக்கொண்டு இப்பெயரையே வழங்கிவர ஆணையிட்டிருத்தலும் கூடும். இதனைப்பற்றிய கல்வெட்டுக்களுள் கி பி 16ஆம் நூற்ருண்டினதாகக் கருதப்படும் ஒருகல் வெட்டில் † இக்குன்றுக்குத் **திருநாமக்கல்** என்னும் பெயருண்மை குறிக்கப்பட்டிருக்கிறது.

இவற்ருல் இக்குன்றின் பெயர்க்காரணம் அறியலாயிற்று. இதனினின்றும் நாமறிவது, **நான்மொழிநாடு** என்பதற்கும், **நாமக்கல்** என்பதற்கும் யாதோரியையும் இல்லை யென்பதாம். இவற்றிடை யியைபுண்டென்பார் கூற்று **குலாமகம்மதுவுக்கும் கோகுலாட்டமிக்கும் மிக்க இயைபுண்டு** (இவ்விருதொடரினும் குலா என்றசொல்வருவதால்) என்பார் கூற்ருேடொப்பதாம்.

குன்றின் பெயர் **நாமக்கல்** என்பது ஆனல் **நாமக்கல்நாடு** என்பது மருவி **நான்மொழிநாடு** என ஆயிற்று எனின் அது பொருந்துமேயொழிய, ஐயங்காரவர்கள் கொள்கைப்படி, **நான்மொழி நாடு** என்பது மருவி, **நாமக்கல்நாடு** என ஆயிற்று என்பது எவ்

---

* The inseriptions......belong to the 13th centuary...... mention......Thiru varaikkal.

† The Annual Reports of inscriptions for 1906, No, 12. "Registers an order of a Nayaka. Mentions Thiru-namakkal.

வாற்றானும் பொருந்தாமை உய்த்துணரப்படும். இக்குன்று இல்லாவிடின் எப்படி வேண்டினும் சொல்லிக்கொள்ளலாகுமே யன்றி, இஃது உள்ளவரைக்கும் நாமக்கல் என்பது வேறுசொல் (நான்மொழி)யின் திரிபு எனப்படாமையை அவர் அறியக் கடவர்.

அக்கல்வெட்டுக்களுள் ஒன்றில் 'நாமொழிநாடு' (Namali-nadu) என வருவதே அவர்கள் கொள்கைக்கு அடிப்படை யாகும். அதனுண்மையையும் காண்பாம்:—முற்குறித்த கல் வெட்டின் எண் 11ல், "....They....mention....Vidukadan of Namoli-nadu, and Thiruvaraikkal" எனக் குறிக்கப்பட்டி ருக்கின்றது. இதற்குத் "திருவறைக்கல்லையும், நா(ன்)மொழி நாட்டு விடுகாதனையும் இவை குறிக்கின்றன" என்று பொரு ளாகுமேயொழிய, ஐயங்காரவர்களின் கொள்கைப்படி "நா(ன்) மொழி நாட்டு விடுகாதனையும் நா(ன்)மொழி நாட்டுத் திருவறைக் கல்லையும் இவை குறிப்பன" என்று பொருளாகாதென்ப.

அவ்வாங்கிலச் சொற்றொடரில், எண்ணிடைச்சொல் (and) வின் முன் காற்புள்ளி(,) யிட்டிருத்தலைக் குறிக்கொள்க என ஆங்கிலமொழிப் புலவர் கூறுப. விடுகாதனுடைய நாடு, யாதாயினுமாகுக. இங்கு, நாமக்கல்லுக்கும், நா(ன்)மொழி நாட்டுக்கும் இயைபு உண்டா? என்பதே மேற்கொண்ட பொருள். இயைபில்லை யென்பதே அறியப்பட்டமையின், அவர்தம் அடிப்படையும் பழுதுறுவதாயிற்று. இனி, இந் நாமக்கல் எந்நாட்டினைச் சார்ந்ததென்பதனையும் காண்பாம்.

கொங்குமண்டலம் இருபத்துநான்கு நாடுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இவற்றின் உண்ணாடுகளும் உண்டு. அவ்வுண் ணாடுகளுளொன்றான ஏழூர் நாட்டினைச் சார்ந்தது நாமக்கல் எனக் கல் வெட்டுக்காரர் கூறுவர்.* அக்கல்வெட்டின் இரண் டாம் பகுதி பக்கம் 77ல் "....நாமக்கல் இருக்கும் பகுதி

* கொங்குமண்டல சரித ஆராய்ச்சியாளரும், சதகப்பதிப்பாசிரியரு மாகிய திரு. அ. முத்துசாமிக்கோனர் அவர்களும் இதனை உடன்படுவர்.

ஏழூர்நாடு என்னப்படும். .(....The sub division called Elur-nadu in which Namakal was situated) என்று கூறப்பட்டிருக்கின்றது.

இங்குக் குறித்த ஏழூர் என்பது கொங்கு நாட்டுச் சிவதலங்களுள் ஒரு வைப்புத்தலம். நமது திருநாவுக்கரசுசுவாமிகள், 'க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்' 5-ஆம் திருப்பாடலில், '....இடும்பாவனம், எழுமூர், ஏழூர், தோழூர், எறும்பியூர், ஏராரும் ஏமகூடம், கடம்பை யிளங்கோயில் தன்னினுள்ளும் கயிலாய நாதனையே காணலாமே' எனக் குறிக்கப்படுவதும் இத்தலமே. இவ்வூரில், இப்போது திருக்கோயிலில்லாது அழிந்தொழிந்து போயினும், சிவலிங்கத் திருவுருவம் ஒரு கிணற்றுமேட்டில் இருக்கிறது. கொங்கேழ் சிவதலங்களிலொன்றாகிய திருச்செங்கோட்டில், இப்போது முருகக்கடவுளின் திருத்தேராக இருப்பது, இவ்வேழூர்ச் சிவபெருமானின் திருத்தேரேயென அங்கு (திருச்செங்கோடு) உள்ள முதியோர் கூறுகின்றனர். இவ்வேழூரோடு சேர்த்துத் திருநாவுக்கரசுசுவாமிகள் கூறிய மற்றொருவைப்புத்தலம் தோழூர் என்பது. இத்தலத்தினை, அடைவு திருத்தாண்டகம் 4-ஆம் திருப்பாட்டிலும் 'துறையூரும், தோழூர் தானும், துடையூரும் தொழ வினைகள் தொடராவன்றே' என அவர் (திருநாவுக்கரசு சுவாமிகள்) திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

இத்தோழூர், எமது நண்பர், இலத்திவாடிச்சமீன்தாரர், ரா. இ. சின்னசாமி ரெட்டியாரவர்களின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. இத்தலக் கடவுளின் திருப்பெயர் சோழீச்சுவரர் (தோழீச்சுவரர்?) என்பது.

இவ்விரு ஊர்களிலும், ஏழூர், நாமக்கல்லுக்கு வடக்கே ஒரு ஏழு நாழிகை தூரத்திலுள்ளது; தோழூர், நாமக்கல்லுக்குத் தெற்கே ஒரு ஐந்துகல் தூரத்திலுள்ளது. இவ்வாறு, கல்வெட்டுக்காரர் கூறும் நாடுகள், நமது இலக்கியங்களோடும் இயைபுடையனவே. இதற்குச் சான்றாக, அக்கல்வெட்டின்

அப்பக்கத்தில் (77) குறிக்கும் குறுப்புநாடு (குறும்பு + நாடு = குறுப்புநாடு) (....which also refers to Kuruppu-nadu in which Vijayamangalam....situated....) நமது, "சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஊர்த் தொகைப்பதிகம் 2ஆம் திருப்பாட்டில்,.... கொங்கிற்குறும்பிற் குரக்குத்தளியாய் குழகா குற்றாலா,....கங் குற் புறங்காட்டாடீ யடியார் கவலைகளையாயே- எனக் குறித் தருளியிருத்தலைக் கொள்ளலாம். இனி, கொங்குமண்டல சத கத்துக்குஇணைப்பாகச் சேர்த்துள்ளதும், கொங்குமண்டலசத தின் ஒவ்வொருநாட்டின் தலையூர்களையும் தெரிவிக்கும் பாடல் களையுடையதும் ஆகிய கொங்குமண்டலஊர்த்தொகை என்னும் நூலில், இந்நாமக்கல், வாழவந்திநாட்டில், அதன் உண்ணுடா கிய தூசியூர் நாட்டினைச் சார்ந்ததாகக் குறிக்கப்படுகிறது.

இவ் வூர்த்தொகைநூல், பலமாறுபாடுகளையுடையதாய், இன்னும் திருத்தமடைந்து வெளிவரவேண்டியிருத்தலின், இது ஒரு சிறந்த ஆதாரமாகக்கொள்ளப்படாது. ஆகலின் கல்வெட் டிற் கூறப்படுவதே சிறந்த ஆதாரமாம். ஆதலின் நாமக்கல், (வடகோங்கில்) ஏழூர் நாட்டினைச் சார்ந்தது என்பது இவற்றால் பெற்றாம். திரு. மு. இராகவையங்காரவர்கள் தமது சேரன் செங்குட்டுவன் என்னும் புத்தகத்துக் கொங்கிளங்கோசரைப் பற்றிக் கூறிவருமிடத்தே, நா(ன்)மொழிநாடு என்னும் இதனைப் புகுத்திப் பிறரையும் தியங்கவைத்தனர். இவ்வாறு புகுத்து வதற்கு இடந்தந்தது மதுரைக்காஞ்சியில்வரும் "நான்மொழிக் கோசர்" என்னும் ஒருசொற்றொடராம். மதுரைக்காஞ்சியில்

"பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேந் தோன்றிய நாற்பெருங் குழுவும்"

என வருவதற்கு நச்சினார்க்கினியாருரைப்படி 'நாற்கோசர் மொழித்தோன்றியன்ன நாற்பெருங்குழு"- நான்குவகையாகிய கோசர், வஞ்சினமொழியாலே விளங்கினாற்போன்ற, தமது மொழியால் தாம்மேலாய் விளங்கியதிரள்" என்று பொருள் கொள்வதே இங்கு உவமைக்குப் பொருத்தமாகிறது. அவ்வர லாற்றினை யவர் (நச்சினார்க்கினியர்) அறிந்திருப்பர். இங்கு,

நாற்கோசர்மொழி யெனப் பிரித்துப் பொருள்கொள்ளலை விடுத்துச் சொற்கிடந்தவாறே நான்மொழிக்கோசர் எனக்கொண்டமையே தாமும் பிறரும் தடுமாறநேர்வித்தது. இங்குமொழி யென்றசொல்லைப் பிரித்து இயைப்பினன்றி செவ்வியபொருள் படுமாறின்மையையும் அவர் அறியக் கடவர்.

இதனால், நாற்கோசர் எனச் சொல் தொடர்வதை யன்றி, நான்மொழி யெனச் சொல் இங்குத் தொடராமை யறியலாகிறது. ஆகவே, நான்மொழிக் கோசர் எனத் தனித்துச் சொல்லும் தொடரே யில்லை யென்பது பெறப்பட்டது. நான்மொழிக் கோசர் என்ற தனித் தொடரில்லையாகவே, அது பற்றித் தொடரும் நான்மொழிக் கோசர் நாடு என்பதும், அது மருவி நான் மொழி நாடு ஆயிற்றென்பதும், அது முறையே நாமொழிநாடு, நாமக்கல்நாடு என மருவிற்று என்பதும் முழுத்தவறு ஆயினமை கண்டாம். இனி, அக்கல் வெட்டிற் குறிக்கும் நாமொழிநாடு (Namoli-nadu) என்பது தான் யாதோ என்னின், அக்கல்வெட்டில் "நாமொழி நாட்டு விடுகாதன்" எனக் குறிப்பதால் அது அவனுடைய நாடு ஆகல் வேண்டும். ஒருநாட்டில் உள்ள ஒருவர், பிற நாட்டி லுள்ள ஒருகோயிலுக்குக் கட்டளை யமைத்ததைக் கல்வெட் டிற்கூறுவதும் வழக்கமென்பதை யாவருமறிவர். அன்றியும், கல்வெட்டுத்துறையார் அக்கல்வெட்டு, முழுவதும் படிக்கமுடியாதபடி அதன்மீது கட்டிடம் கட்டப்பட்டிருப்பதாய்க் குறிக்கிறார்கள். ஆகையால், கிடைத்தவரைக்கும் அக்கல்வெட்டு வெளியிட்டபின், அல்லது இதற்குத்துணையான பிறசான்றுகள்கிடைத்தபின், யாதேனும் கூறமுடியுமே யொழிய, இப்பொழுது அதுபற்றி யொன்றும் கூறமுடியாது என்பதாம். இவற்றால், நாமக்கல்நாடு, என ஒருநாடு இல்லை என்பதும், அது நான்மொழிநாடு என்பதன் திரிபு ஆகாதென்பதும், இதுபற்றி அவர்கள் கொண்ட கொள்கை தவறு என்பதும் பெற்றாம்.

உ

பண்டைக்காலப் பாவலரும் நாவலரும்

ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,
தோரமங்கலம்.

(துணர். எ. மலர் க. சகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நம் நல்லிசைப்புலவர்கள், செல்வர்களையடுத்துப் பரிசில் கடாவும்போது, ஈகைச்சிறப்பை விதந்து கூறி அதனுலுள தாம் புகழே உயர்ந்ததெனத் தெருட்டும் தேற்றமும் நெஞ்சத் திட்பமு முடையவர்களா யிருந்தனரெனக் கீழ்ப்போதரும் அவரது சொற்கள் குறிப்பிடுகின்றன.

"முன்னுளே பெய்துவிட்டே மென மழை பெய்யாது விடினும், சென்றபோகம் விளைத்தோமென்று விளைபுலங்கள் விளையாவிட்டாலும் உலகம் என்செய்யும்? அஃதொப்ப எமக்கு முன்னமே தந்துள்ளேமென்று நின்போல்வோர் மறுத்தல் இன்னுது. கையேற்கும் வறிஞரைப் பார்க்கினும், கொடாதவரே இன்பத்தை இழப்பவராகின்றனர். கொடுக்கும் வள்ளியோர், வறுமை மிக்குக் கொடுத்தலியலாக் காலையில் நாணுற்றுப் பொன்றினும் பொன்றுவர். இல்லையென்றுரைக்க ஒருப்படார்" என்றொருபுலவர் பரிசில் கடாவுகின்ருர்.

"தன்னைப் போன்ருே ஞெருவன் எதிர்நின்று 'எனக்கு ஈக' எனப் பற்காட்டிபிரத்தல் இழிவுடைத்து. அவ்வேற் போன் காட்டியவாறே, கொடுப்போனும் 'இல்லை' எனப் பற்காட்டி உரைத்தல் அதனினும் மிக இழிவுடையதே. 'இதனைக் கொள்க' எனக்கொடுத்தல் உயர்ந்ததே. 'அதனை வேண்டேன்' என எதிர்மறுத்தல் அதனினும் உயர்ந்ததே." "நெடிய கடலேயாயினும் நீர்வேட்குநர் அதனை விரும்பி யுண்ணுர். விலங்குகள் காலாற் கலக்கிய கலங்கற் சேற்றுநீர்

சிறிதே யெனினும் அந்நீருள்ள விடத்தே பலவழிகள் உள வாகும்.'' "பரிசில் பெறுநராயின், தாம் புறப்பட்ட வேளையை யும், வழியில் நேர்ந்த நிமித்தங்களையும் பழித்தலையன்றிக் கொடாதோரைப் பரிசிலர் பழிப்பாரல்லர்.'' . "தம்மாற் கொடுத்தற் கியல்வதை இயலுமெனக் கொடுத்தலும், இயலாத வற்றை இயலாதெனக் கூறிப்போக்குதலும் முயற்சியின் பால தாகிய நட்பிற்கடுத்தவை. இயலாததனை இயலுமென்றுரைத் துக்கொடாமையும், இயல்வதனை இல்லை யென்றுரைத்து மாற் றலும் ஆகிய இவ்விரண்டும் இரப்போரை வாட்டுங் கருவி களாவதோடு கொடுப்போர் புகழையும் குறைக்கும் வழிகளாம்.'' இங்ஙனம் பலபடச்சொல்லி அருளுடையராகச் செல்வரைத் திருத்தி வழிப்படுத்தினர் நம்மாண்புடைத் தமிழ்க்கலைஞர். வெளிமான் தம்பியாற் சிறிது பொருள்பெற இசையாது மறுத் துச்சென்று, குமணன் என்னுங் கொடைவள்ளல் தந்த யானை யைக் கொணர்ந்து, அவ்வெளிமானூர்க் கடிமரத்தே கட்டி, அவனை அழைத்து அக்களிற்றைக் காட்டி, பெருஞ்சித்திரனார் என்னும் பிடிவாதப் புலவர்,

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையும்''.......அவர்க்குப் புரவலருண்மையும்

காண்பாயாக. இக்கடிமரத்தில் யாக்கப்பட்டுள்ள யானை, நின்னை யகன்று யான்பெற்றுவந்த பரிசில். இத்தகைய யான் நின்பாற் சிறிது பெற்றுச் செல்லக் கடவனோ! என அவனை நாணுறச்செய்தனர். என்னே இப்புலவர் இறுமாப்பு! வண்மை செய்தலில் போட்டிபோட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் தாராள மாய் வழங்கற்கு இவர்செய்த செய்கை மிகத்திறமையுடை யதே. இங்ஙனம் தாய்மொழி வல்ல புலவர்க்கு யானைப்பரிசில் வழங்குங் கொடையாளரின் மொழிப்பற்றும், கடப்பாடும், நினைதோறும் வியப்பூட்டுவனவே யன்றோ?

II. பாவலரின் அறவுரைகள்.

கலையில் அறிவுநிரம்பி, உலகியலு முற்றறிந்த தேர்ச்சியாளராகிய நம்பாவலர்கள், அவ்வப்போது அரசர்கட்கும் மற்றைச் செல்வர்கட்கும் உரைத்த அறவுரைகளும் அளவற்றவை. அவற்றிற் சிலவற்றை எடுத்துக் காட்டி அவர்கள் மனப்பாங்கையும் கல்வியைப் பயன்படுத்திய முறையையுந் தெரிவிப்போம். ஒருபுலவர், ஓர் அரசனை அணுகி, குடிகளிடத்து மிக்க பொருளை இறையாகவிதித்து வருத்தி வாங்காதே எனக்கூறும் இடிப்புரையைக் காண்மின்! "மன்னவ! காய்த்த நெல்லை அறுத்திட்டுக் கவளந்தந்தால் சிறுபுலமேயாயினும் யானைகளுக்குப் பன்னாள் உணவளிக்கும் விளையுளைத்தரும். நூறு செய்யாகவுள்ள பெரிய நிலமேயாக, யானைகளைத் தனியேவிட்டு மேய்த்தால், அவற்றின் வாயிற்புகும் நெற்களினும் கால்பட்டு அவமேகழிவது பெரிதாம். அஃதேபோல், அரசன், நெறியந்து குடியிறைகொண்டால்நாடு சிறிதேயாயினும் கோடியாகிப் பொருள் தந்து வளமும் பெருகும். அறிவின் மென்மையால் நாடோறும் பேரவாவுற்றுத் தரம் அறியாமல் தான் கூறுவதையே தாமும் தொடர்ந்து கூறும் அரசியலாளரோடுகூடி அன்புகெட இறையை மிகுத்து வாங்கும் வேந்தன், அந்தயானை புக்க புலம்போல் தானும் உண்ணாது உலகத்தையும் கேடுறுவிப்பன்" என்று கூறுகின்றார். மற்றொரு கவிஞர் 'அருளையும் அன்பையும் நீக்கி, நீங்காத நரகம் புகுவோருடன் சேராமல், அருந்தவங்கிடந்து பெற்றதோர் மகவை யோம்பும் பெற்றோரைப்போன்று இவ்வுலகையாள்க; ஓர் நாட்டிற்கு அரசனாதல், மிகவும் அருமைப்பாடுடையது என்பதனை மறவாதே, என்று தெருட்டுகின்றார். பின்னொருவர், 'இல்லையெனவரும் பரிசிலர்களுக்கு வரிசையறிந்து வரையாது வழங்குக. இறைவன் கோவில் வலம்வரும்போது, நின் வெண்கொற்றக்குடை தாழ்த்தபடுவதாக; நின்னை வாழ்த்தும் அந்தணாளர்முன் நின்முடி வணங்குவதாக; நின் பகைவரின் ஊர்சுடும் புகையால் நின்கண்ணி வாடுவதாக; மடவார் ஒளிதிகழும் முகத்தின்முன்னர் நின்சினம் தணிவதாக" என

அமையம் நோக்கிச் செய்யுந் திறப்பாடுகளைக் கூறும் முகத்தால், ஈகை, கட்வுண்மாட்டன்பு, பெரியோர்வழிபாடு, வீரம், இன்பம் முதலியவற்றைப் புகட்டுகின்றார்.

வேறொரு புலவர்கோமான், 'அரசே! நீ சேரும் மறுமையுலகத்தில் செல்வம் நுகரவிரும்புவாயேனும், நீயொருவனே இவ்வுலகத்தே மேம்பாடுபெற வேண்டுவாயேனும், இவ்வுலகில் நின்புகழை நிலைநிறுத்தக் காதலிப்பாயேனும், இவற்றிற்கெல்லாம் இன்றியமையாததோர் தகுதியைக் கேட்குக்கடவாய்; உணவை முதலாகவுடையது உடம்பு; ஆகவே ஒருவர்க்கு உண்டி வழங்குவோர் அவ்வுடலில் நீங்கும் உயிரை மறித்துப் பதித்தோர் ஆவார்; அவ்வுணவுதானும் நிலத்தோடு நீர்சேரின் மிக்குண்டாவது. ஆயினமையின், நின்னாட்டில் எங்கும் நீர்நிலைகளைப் பெருக்கி ஏரிகுளங்களைக் கட்டித் தடுத்து வளம்படுப்பாயாக, நீரை யாவர் பயன்படத் தடுத்துக் குடிவளமுயரச் செய்கின்றார்களோ அவர்களே இவ்வுலகில் தமது புகழையும் நீடுநிலைக்கத் தடுத்தோராவார்'' என்று குடிவளமுறுத்தும் வழி கூறுகின்றார். பிறிதொரு புலவர் பெருந்தகையார், "உயர்ந்தகுடியிற் பிறந்து விளங்கினவர்களை நினைக்கும்போது, புலவர்களாற் பாடப்பெறும் பாட்டும் உரையும் உடைய ஒருசிலரே இவ்வுலகில் தம்வினைகளைப் புகழ்தோன்ற நிறுத்தி வானுலகவின்பம் நுகர்தற்கு விமானமூர்ந்து புகுவர் எனக் கேள்வியுற்றிருக்கின்றேன். கலைமதி, திங்கடோறும் தேய்ந்தும், பெருகியும், மறைந்தும், தோன்றியும், வளர்ந்தன தேய்தலும், தேய்ந்தன வளர்தலும், தோன்றின மறைதலும், மறைந்தன தோன்றலும் இவ்வுலகியற்கையாகுமெனக் கல்லாத மாக்களுக்கும் குறிப்பால் உணரக் காட்டித் திரிகின்ற இத்தேயத்தே, கல்வியில் வல்லுநரோ, அல்லரோ வறுமை வருத்த வந்தோருடைய உண்ணுவயிற்றை நோக்கி, நீ இயன்றவாறு வழங்குக'' எனச் செல்வத்தின் ஆக்கமும் நீக்கமும், உடலின் தோற்றமும் இறப்பும் சுட்டிக்காட்டிப் பசிநோய் தீர்த்தலே தலைசான்ற அறமென உறுதி கூறுகின்றார். புலவர் திலகரொருவர், "அரசே! நின் பிறந்த நாட்கொண்டாட்ட ஒலக்கமானது,

நெருப்பால் வளர்க்கப்பெற்ற தாமரைப்பூவைச் * சிதறுண்ட மயிர்த்தலையிற் சூடிய பாணர்களால் சூழப்படுவதாக; அவர்கள் குழூஉவினீங்கிய பின்னர், நின் சந்தனம் பூசிய மார்பகம், நினது மனைவிமார்களின் தோள்களாற் சூழப்படுவதாகுக; கொடியோரை ஒறுத்தலினும், தக்கோருக்கு அளித்தலினும் சோம்பலற்றிருந்து, இங்குச் செய்யும் நல்வினைகளுக்கு நற்பயனும், தீமைகட்குத் தீயபயனும் மறுமைக்கில்லை யென்கின்ற அறிவிலிகளோடு சேராமல், நின் சுற்றத்தினர் மகிழ்ச்சியின் பாலராகுக; கடவுள் விழாக்காலத்தே, கூத்தாடிகள் வேற்றுருவம்பூண்டு ஆடி ஆடித் திரைக்குள் மறைந்து மீண்டும் மாறுகோலத்தோடு வெளிப்படுமாறுபோல, மக்கள் தோன்றித் தோன்றி மறைதற்கிடனாகிய இவ்வுலகத்தே, நீ யீட்டும்பொருள் புகழின்பாற் படுவதாக'' என அறமுதலிய நாற்பயன்களையும் விளங்கச் செவியறிவுறுக்கின்றார்.

மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனாரென்னும் நல்லிசைப்புலவர் கடல்சூழ்ந்த நிலவுலகம் முற்றும் தமதொருவெண்குடைக் கீழதாக, அரசாளும் வேந்தர்பெருமானுக்கும், நள்ளிரவிலும் நடுப்பகலிலும் ஓயாது பசிவருத்த உறக்கமின்றி விலங்குகளை வேட்டமாடி யுண்ண வலையிட்டுப் பதுங்கியிருக்கும் பேதை வேடனுக்கும், உண்பொருள் நாழி (படி) யளவே; உடுக்கப்படுவதும் இரண்டு ஆடைகளே; ஏனை மனைமகிழ்ச்சி, மக்கள் இன்பம், வாழ்க்கையின் ஆக்கம் நீக்கம் முதலியனவும் ஒன்று போல்வனவே: ஆதலின், செல்வத்தைப் பெற்றதன்பயன் இரப்போர்க்கு ஈதலொன்றேயாம். தாமே துய்ப்பேமென்னின் தவறுபடுவன பல'' எனச் செல்வர்கட்கு ஈகைப்பயனை எடுத்துக் காட்டுவதுங் காண்க.

மற்றோர்கவிஞர், பெருமைமிக்க அரசனே! உன் திறத்தனவாகிய சில கூறுவேன். அவற்றைக் கேட்கக்கடவாய்: அறக்கடவுளே நேரில்வந்து ஆராய்ந்துரைத்தாற் போன்ற

* நெருப்பால் வளர்ந்த தாமரை—தட்டார் உலைத்தீக்கொண்டு உருவாக்கிய பொற்றாமரை.

செங்கோலாராய்ச்சியுடைய நின்பால் தமதுவழக்கைத் தீர்த்துக் கொள்ள வருவோர்க்கு, நீ காட்சிக்கெளியனுதல் வேண்டும்; அஃது, பயிர்வாடுகின்றமையால், சிறுமழைதூறினும் சாலுமே என வானேக்கும் உழவர், பெருமழையையே பெற்ருற்போல் மகிழ்ச்சி தருவதொன்ருகும். நீ கைக்கொண்ட வெண்கொற்றக்குடை வெய்யிலை மறைப்பதற்காகவே என்று கருதற்க; நின்னடிக்கீழ் வாழும் குடிகளுக்குத் தண்ணிய நீழல்செய்தற்காமென நினைக; பகைஞரைக் களம்படக்கொன்று நின்படைஞர்தரும் வெற்றியும், குடிகள் உழவு கலப்பை கொண்டு விளைத்த உணவின் பெருக்கால் ஆயதே. மற்று, நாட்டில் மழைபெய்யாதொழியினும், வருவாய் குறையினும், மக்கள் செய்கை இயற்கையொடு முரணினும் இவற்றிற்கு அரசன் கொடுங்கோலே காரணமென இவ்வுலகம் அரசனைப் பழிக்கும் வழக்கத்தை என்ஞான்றுமுடையது. இதனை நன்று அறிந்தனையாயின், நீயும் புறஞ்சொற்குச் செவிகொடாமல் குடிகளைப்பாதுகாத்து, அவர்தரும் இறைக்கடன் கொண்டு, ஏனைத் தொழிலாளரையும் ஓம்புவாயாக; அப்போதுதான், நின்பகைஞர் நின்னடிக்கீழ்ப் பணிவார்கள்" எனக்கூறும் அரசியன்முறைகள் எத்துணை விழுமியன! நொக்குமின் !! அரசாட்சித் துறையிற் பன்னெடுநாட் பழகிக் காணற்குரிய நுண்ணிய குறைபாடுகளையும், அவற்றைப் போக்கற்குரிய வழிகளையும் மிகஎளிதாக இனிதாகத் தெளிவாகத்தெரிவிக்கும் நம் நாவலர்களின் பேரறிவாற்றலை என்சொல்லிப் புகழ்வது! இம்மட்டும், அவர்களின் அருமைசான்ற கவிகளைக் கூறுது பொருட்களைச் சுருக்கிக்கூறினேம். இனி, அமுதமன்ன அவர்கள் பாக்களில் ஒன்றைக்கூறி, அதிற்பொதிந்த அரசநீதிகளையும் குறிக்கின்றேம்.

பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுப் காற்றிப் பகைஞ
ரடுகளம் வேட்டோன் மருக! வடுதிற
லாளி நிமிர்தோட் பெருவழுதி! யென்ஞான்று

மீர முடையையா யென்வாய்ச்சொற் கோடி!
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்;
மழவ ரிழைக்கும் வரைக்கா னிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்;
படைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்.;
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி மன்ற வூறுக வகழாதி; யென்று
மறப்புற மாக மதுரையா ரோம்பு
மறம்புற மாசைப் படேற்க; வரத்தா
னவையார் கொடுநாத் திருத்தி; நவையாக
நட்டார் குழிசி சிதையாதி; யொட்டார்
செவிபுதைக்குந் திய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார் கினனுகிக், கல்லார்க் கடிந்தொழுகிச்,
செற்றார்ச் செறுத்து, நிற் சேர்ந்தாரை யாக்கு; திநீ
யற்ற மறிந்த வறிவினை மற்று
மிவையிவை வீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமக
ளொருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

“ தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது மரபில் வந்த பெருவழுதி! கேட்பாயாக: என்றும் உயிர்கள் பால் இரக்கமுடையையாகுக: குடிகளை வருத்தி இறைகொண்டு படையாளரைப் பெருக்கி மிகைபடுத்தாதே: நினக்குப் பெரும் பொருளை யீட்டித் தருகிறார்களென்று பேராசைப்பட்டு உன் அமைச்சர் முதலானவர்களை மிகவும் நம்பாதே: அவர்கள் நீதி முறையில் ஈட்டுகின்றனரா என்று நோக்குக; நின் சுற்றத்தின ரைக் கெடுத்துப் பெரும்பொருள் திரட்ட அவாவாதே. இம் மதுரைநகரப் பொதுமக்கள் தமக்குரிமைபூண்டு செய்யும் அறச் செயல்களைச் சிதைத்து, வருவாயை நினதாக்கக் கருதற்க; வழக்கு ஓரம் சொல்லி ஒருதிறத்தாற் பொருள் சேர்த் தற்பொருட்டு அறங்கூறவையினரின் கோடியநாவைத் திருத்தம் செய்வாயாக: உனது நட்பாளரைக் கெடுக்காதே: பகைஞர்

காதுகட்கு வெய்பவாகிய கவியொடு புணர்த்து நின்புகழ் கூறு கின்ற கல்விமான்களுடன் நட்புக்கொள்க; கற்பன ஆழற்ற சிறியோரை நீக்குக; நின்பகைஞரை அடக்கி, நட்டோரை வாழ்விப்பாயாக. அமையம் அறிந்து நடக்கும் ஆற்றலு டையை யாகுக; இன்னோரன்ன அருஞ்செயல்களைச் செய் வாயாயின் நிலைபேறில்லாத இந்நிலமகள், நின் ஒருகுடை நீழ லிலே தங்கிக் கிடப்பவளாவாள்."

இதனினுஞ் சிறந்த அரசியல் நீதிகள் வேறென்? இந் நெறியே முறைசெய்யும் அரசன் நாடு தழைத்தோங்கத் தடை யுண்டோ? அங்ஙனம் அரசர்க்கு நன்மதிபுகட்டுங்கால், யாக்கை நிலையாமையையும், உலகியல் மாறுபாடுகளையும், செய்பக் கட வனவாகிய அறங்களையுங் கலந்துறுதியுரைத்தலுங் காண்மின்!

"பெரிய நாட்டினையாண்ட மன்னவர்களும், பிணத்தின் நிணம் சந்துகளுடே செறிந்த பற்களையுடைய குறு நரிகளும் கூகைகளுங் கூடிவிருந்துண்ண முதுகாட்டிற் சேர்வாராயினர். அம்முறை நினக்கும் நாளைவருதல்கூடும்; ஒருவர் செய்யுந்தீங் கினால்வரும் பழிச்சொல்லும், அறத்தால் எய்தும் புகழ்மொழி யும் ஆகிய இவ்விரண்டுமே அவர் இறப்பினும் இவ்வுலகில் நீடுவாழ்வனவாம். ஆகலின், நீ பழிநீக்கிப் புகழ்வேட்டுத் தன்னலமும் பேராசையுமின்றி, யாவர்க்கும் இனியவே கூறிப் பரிசிலர்க்கு யானையும் தேரும், குதிரையும் வழங்குவையாயின், நீ அவ்விடுகாடுபுகினும், இங்கு நின்புகழ் மிக ஒள்ளியதாக விளங்காநிற்கும்; அங்ஙனஞ் செய்வாயாக" என ஓர் அரச னுக்கு அறிவுரை கூறும் கலைவல புலவரின் உண்மையும் அஞ்சாமையுமுடைய பொன்மொழிகளை நோக்குமின்! மற்றும், "முழுதுலகும் பொதுவறப் புரந்த முடிமன்னரும் தம் அரசை மாற்றார் கைக்கொள்ள விடுத்து; ஈமப் புறங்காட்டை உவப் பாராய் மறைந்தவர்கள் கடல் மணலினும் மிகப்பலரே! உடம் பொடு மாயாது நிற்கும் உயிர் யாதும் இல்லை. கூற்றமுண் மையும் பொய்யன்று; உப்பில்லாது அட்டசோற்றுச் சிறுதிரளை வெறுநிலத்தே புலைமகன் தர உண்ணும் பெருந்துன்பநாள்

வாராமுன்னமே துறவுநெறியை மேற்கொள்க" எனவும், "தம் ஆணையைக் கடற்பரப்பினும் செலுத்திப் பகைவரே இல்லையாக, வென்று என்னை மணம்புரிந்தாண்ட வலிமிக்க மன்னர்கள் எத்துணையோர்! அந்தோ! அத்துணையோரும் மாய்ந்தனரே! அவர்களனைவரையும் இழந்து விலைமகள்போல் பலமன்னரும் என்மேற் கண்வைக்க மானமின்றி யான் இன்னும் உயிர்தாங்கல் நன்றாமோ? என இம்மண்மகள் கண்ணீர் வடித்து அழுங் காஞ்சித்துறையும் உண்டென்பர் நல்லறிஞர்கள்" என்றும், யாக்கை, வாழ்க்கைகளின் நிலையாமையை வற்புறுத்து, மன்னரும் மன்பதைகளும் அச்சுற்று நல்லாறு கடைப்பிடித்தொழுகச் செய்வித்துத் தாமும் அவ்வாறொழுகிக் காட்டிப் புகழ்நிறுவிப்போந்த கலைஞரும் பற்பலரே. இவ்வாறு துணிந்து வலிந்து இஞ்ஞான்றை அரசருக்கும் செல்வர்க்கும் நன்னெறிகளை உரைத்து மிகுதிக்கண் மேற்சென்றிடிக்கும் கல்வியாளர்களை நம்தமிழ்த்தாய் பெற்றாளிலளோ?

III பாவலர்கள் உற்றுழியுதவும் அருஞ் செயல்கள்.

இங்ஙனம் வெறும் வாய்ப்பேச்சுமட்டில் நீதிபுகன்றுநில்லாது, யாரேனும் மெலியோரை வலியோர் துன்புறுத்தக் காணுங்கால் கடுகிச்சென்று ஏதம்நிகழாதவாறு இடைதடுத்து இஃதறனன்று; என்செய்தனை! என இன்மொழிகளால் நயமாக வுரைத்து, வருத்துவோரையும் வருந்துவோரையும் மகிழ்வித்துதவும் ஆற்றலிற் கைபோயவர்கள் நம்கவிஞர்குழாங்கள். கீழ் வருவனவற்றை நோக்குமின்! சோழமன்னருள் ஒருவன் கருவூரை முற்றுகைசெய்ய அதனை ஆண்ட ஓர் சேரமன்னன் அஞ்சி மதிலகத்தே தங்கி வெளிப்படானாதல்கண்டு ஆலத்தூர்கிழாரெனும் பாவலர்பெருமான், அச்சோழனை நோக்கி, "நீ இப்பகைவனைக் கொல்லுக, அன்றிக் கொல்லாதுவிடுக, அதுநின் ஆண்மையைப் பொறுத்ததொன்று, இவனது காவற்காடுகளை நின்படைகள் வெட்டும் ஓசை தன்காதில் இடிப்பவும் வெளிவந்து வீரங்காட்டிப் போர்புரிதற்காற்றாது அஞ்சியிருக்கு மவனோடு நீ பொருதல் மிகவும் வெட்கம் வெட்கம்!" எனக் கூறிப்

போரைமாற்றிப் பல்லுயிர்களையும் காப்பாற்றினர். கோவூர் கிழாரென்னும் அருள்வள்ளல், சோழமன்னர்கள் இருவர் தம்மிற்பகைத்துப் போர்தொடங்கவிருந்த அமையத்தே அப்பகையரசன் நாட்டினின்றும் தன்னாட்டிற் பரிசில்வேண்டிவந்த இளந்தத்தன் என்னும் இரவலனை, அவன் மாற்றானுக்காக ஒற்றுவந்தானெனப் பிழைபடவுணர்ந்து கொல்லப்புக்க அரசனைத் தடுத்து, "மன்ன! எமது பரிசில்வாழ்க்கையைக் கேட்பாயாக! இரவிற் படுக்கம்புகும்போதே நாளைக்கு நமன்போல் எய்தும் நம் பசிநோய்தணிக்கும் மருத்துவன் யாண்டையான்? எனக் கருதி ஓர்கொடையாளனைக் குறிக்கொண்டு பின் உறங்கி, மறுநாள் வைகறையே புட்களைப்போல அத்திசைநோக்கி வழி நெடுந்தூரமென்று நினையாமலும் பலகாடுகளைக் கடந்தும் விரைந்துசென்று, கல்வி முதிரக்கற்றலால் வடிக்கப்படாத பரிய நாவினால் வல்லவாறு பாடிப் பெற்றதனை உவந்து, அது கொண்டு சுற்றத்தாரை ஊட்டிச், செட்டும்சிக்கனமுமாக வாழ விரும்பாமல், தம்பால் வருவோர்க்கும் கொடுத்து, கொடுப்போர் வரிசையறிந்தேவுதலையே வேட்டு வருந்திநிற்கும் தகைமையது. பகைவர்கள் நாணுறும்படி இறுமாந்து நடப்பதொன்றைத்தவிர, வேறு பிறர்க்குத் தீங்குசெய்தலை, எம்வாழ்க்கை அறிந்திலது. ஆயினும் அஃது எளியதொன்றென எண்ணற்க; உலகைஆளும் செல்வம்படைத்த உம்மோடொத்த பெருமையும் உடையதுகாண் என்றுகூறி அப்புலவரை உய்வித்தனர். நல்லிசைப்புலவர் தம்இனங்காக்கும் பெருந்தகைமையைக் கண்டனிரோ! மற்றோர் சோழ அரசன், தன்பகைவனுடைய மக்களெனக்கடுத்துச் சிலசிறுவர்களை யானைக்கிடப்புக்கானாக, அது கண்ட இப்புலவரே, முற்பட்டு, "ஐய! நீயோ, ஓர் புறவினைக் காத்தற்பொருட்டுத் தன் உடம்பிற்றசைகளை யீர்ந்தளித்த சிபியின் வழிவந்தவன்! இவர்களோ கல்வியையே வாழ்க்கைமுதலாகக் கைப்பற்றும் புலவர்கட்குத் தமதுபொருளைப் பகுத்தீந்த வள்ளலார் வழித்தோன்றல்கள்! இச்சிறுவர்கள், தம்மை இக்களிறு கொல்லுமென்பதனையுமறியாது, முன் அஞ்சியழுத அழுகையை மறந்து, யானையை வியந்து நோக்கும் அத்தனைப்பேதை

இளைஞர்! இவர்கள், இம்மன்றத்தை மருண்டு நோக்கி, அச்சத்தால் என்றும் அறியாத புதிய வருத்தத்தை யுடைகின்றனர். இதனைக் கேட்பாயாயின், பின் நீவிரும்பியதைச் செய்க எனக் கூறி அவன்கன்மனத்தைத்தம் இரக்கமொழிகளால் கனிவித்து அச்சிறுர்வாழ வரமளித்தனர். இப்பெரியார், சோழகுலமக்கள் தாயவுரிமைபற்றிக் கலாய்த்து ஒருவரோடொருவர் எதிர்ந்து அமர்விளைக்கத்தொடங்கலை யறிந்து, இடைப்புக்குத் தகைந்து, "நும்மோடு போர்புரிவோர் சேரர் பாண்டியரென்னும் வேற்றுப்புலத்தரசரல்லர். நீயும் நின்னோடு பொருபவனும் கூடியமாலை ஆத்தியே. இருவிரும் போர்முனையில் வெற்றி பெறுதல் சாலாது' நும்மில் எவர்தோற்பினும் தோல்வி நுங்கள் குலத்தின் மேலதே. ஒருகுடிப்பிறந்தோர்க்கு அடுப்பதன்று இச்செய்கை. இதனால்வரும்பயன், நும்போன்ற அரசர்கள் உடல்பூரிக்க எள்ளி நகையாடுவதேயாம்" என மனத்திற்படுமாறுணர்த்தி, அவர்கள் நாணுற்றுப் போர்ஒழிந்து செல்லச் சந்துசெய்தனர்.

கோப்பெருஞ்சோழன் என்பான், தன்மக்களோடு பகைத்துப் போர்செய்ய முயன்ற காலையில், புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர்கோமான் தலைப்பட்டு, "அரசே நின்னொடு போர்நேர்குவோர் சேரபாண்டியரென்னும் பிறவரசர்களல்லரே! நீ இவர்க்குப் பகைவனுமல்லையே! நீ இவர்களை வென்றாயேனும் நினக்குப்பின் இவ்வரசுரிமையைப் பெறுபவர் யாவர்? கருதிச்செய்க! அல்லது அவர்களால் நீ வெல்லப்படினும் நின்மாற்றார் மகிழ்ச்சிகொள்ளப் பழிபூண்பாய்! ஆகலின் உன்வீரச்செயல் விட்டொழிக்கற்பாலது" என விலக்கினர். இங்ஙனம் அரசரோடு அஞ்சாதுகூறி, நல்லறம் புரிவிக்கும் நாவலர்கள் இக்காலத்தில் யாவர்? அரசர் பேசும்மொழியும் நாட்டின் மொழியும் புலவர்புகல்மொழியும் அவர்கள் வாழ்ந்த நாடும் ஒன்றாயிருந்தமையே நமது பாவலர்க்கு மிக்க செல்வாக்கைத் தந்தது. ஓர் புலவரேறு, பகையரசனோடு போர் தொடங்கும் மன்னன் ஒருவனை நோக்கி, "ஐய! நீ, நின்பகை

வரைக் கொல்லினுங் கொல்க; அவர் நாட்டு விளைபொருட்களைக் கொள்ளை கொள்ளினுங் கொள்க. அவர் ஊர்களை அழல் கொளுவினும் கொளுவுக. அவர்கள் காவற்காடுகளின் மரங்களை மட்டும் வெட்டாதுவிடுக, ஏனெனில் நின்யானைகளைப் பிணிப்பதற்கு வேறுமரங்கள் இல்லையாய்விடும்" எனக் குறிப்பாகக் கூறிப் போரைவிலக்கினர், தாம் எண்ணியவாறே மன்னர்கள் நடக்க, ஏற்ற இனிய நயமொழிகளை அமையமறிந்து பையவுரைத்து, மகிழ்விக்கும் நம் தமிழ்க்கலைஞரின் மேதக்க பண்பை என்னென்று வியப்பேம்!

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற தேவர்திருவாக்குக்கு நம்பாவலரின் செய்கையே இலக்கியமாகும். சொற்சுருங்கப் பொருள்விரித்து ஓரசை ஈரசைச் சொற்களே பெரும்பாலும் வர, இழுமென்னும் ஓசையுடன் விரவத்தொடுக்கும் அமிழ்தினுமினிய செய்யுட்களின் அமைதிதான் என்னே! கற்போர் வாயிற் றேனூறநிற்கும் அப்பாக்களிற் பொதிந்த உயரிய கருத்துக்களின் மேன்மைதான் என்னே! காணுமின் அன்பர்காள்!

"மக்கட்கு நன்மைசெய்ய ஆற்றலில்லாவிடினும், தீமைசெய்யாது விடுக, அஃதே பேரறமாகும்."

"கூற்றுவன் நமதுவாழ்நாள்மேற் செல்லுமெனக் கருதுவார்களாயின் எவரும் தீங்குசெய்தற் கிடனிராது" என

நல்வழிப்படுத்தற்குரைக்கும் அறவுரைகள் இன்னோரன்ன பல. "ஓர்வீட்டில் சாப்பறை யொலிப்ப, மற்றொருவீட்டில் மணமுழவு ததும்ப, மணம்புரிவோர் மலர்மாலை சூடிக் களிசிறப்ப, துணைபிரிந்தவர், கண்களில் நீர்பெருகப் புலம்ப-இங்ஙனம் படைத்தனனே! நற்பண்பில்லாத நான்முகன்! என்செய்வேம்! அந்தோ! இவ்வுலகவாழ்வு எவ்வாற்றானும் துன்பந் தருவதே! இவ்வியற்கையை யுணர்ந்தோர் இதினின்றும் இன்பமுறும் வழியை நாடக்கடவர்" என இன்பதுன்பங்கள் அடுக்கி வருதலையும் வீடுபேற்றின் மாட்சியையும் புகன்றும், "இப்போது

நினைக்க வருத்தம் விளைகின்றது. அது யாது என்பீரோ! ஆற்றின்மணலிலே செய்யப்பட்ட வண்டற்பாவைக்கு மலர் கொய்து சூட்டி, குளத்திலே விளையாடும் சிறுமிகளோடு கை பிணைத்து அவர்கள் தழுவும்போது தழுவியும், ஆடும்போதாடியும், கள்ளமற்ற வெளிற்றுள்ளமுடைய பேதையரோடு நீர்க்கரையருகே கூன்படவளைந்த மரக்கொம்பின் மேலேறிக் குளத்துள் துடுமெனக் குதித்து நீருண்மூழ்கி மண்கொண்டுவந்து காட்டியும் யான், விளையாடிய அவ்விளம்பருவம், இப்போது எவ்விடத்ததோ? அறியகில்லேன். இப்போதோ, பூண்கட்டிய பெரிய தடியை ஊன்றி நடந்து, இருமலுக்குள் மறைந்து எழுத்துருவாய் வெளிப்படும் சிலசொற்களை இயம்பிப் பெருகிய மூப்புடையேனாகினேனே" எனத் தன்னைச்சுட்டி இளமை நிலையாமையை இரக்கம்பட வுரைத்தும், தம் வாழ்நாளை மக்கட்கு நன்மொழிகூறித் தெருட்டுவதனாற் செலவிட்டனர் பண்டைக்காலப் பாவலர் பலரும். இஞ்ஞான்றோ சிறிது கற்றவுடனே யாதேனுமோர் உத்தியோகத்தை நாடித் தமது சாண் வயிறோம்பலிலே காலம்போக்குவோர் பலர் மலிந்து வேலை கிடையாத் திண்டாட்டத்தை வருவிப்பாராயினர். நாட்டிற்கு நன்மைசெய்வோரும் சிற்சிலரே யாயினர். அக்கால வாழ்க்கையும், இக்காலம்போக்கும் எத்துணை மாறுதல் பெற்றிருக்கின்றன பாருங்கள்.!

(தொடரும்.)

பின்னத்தூர் சுப்பிரமணியசாத்திரியார்

தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி

(முற்றொடர்ச்சி பக்கம் 213.)

அற்றன்று; அல்வழித் தொடர்மொழி பொருண்மேலா மாறுணர்த்தினமையால் கிளவியாக்க மாயிற்றெனின்,

'பொருண்மை சுட்டல்........பெயர்ப் பயனிலையே.'

'பெயரினாகிய தொகையு மாருளவே
அவ்வு முரிய அப்பா லான.' (பெயரியல்)

'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.'

'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே.'

'அவைதாம், தத்தம் கிளவி அடுக்கு நவரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே.' (எச்சவியல்)

'முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.' (வினையியல்)

என்னும் இச்சூத்திரங்களுள் ஓதப்பட்ட ஒத்துக்களும் கிளவியாக்கம் என்னும் பெயர் பெறுவான் செல்லுமென்க. இதனாலே, பெயரியலும் வினையியலும் தனிமொழி யிலக்கணமே கூறியன என்றதும் தவறுதல் அறிக.

'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்'

'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.' என்னும்

கிளவி யாக்கத்துச் சூத்திரங்கள், ஒருமொழி யிலக்கணம் கூறுதலின், அவ்வோத்து, தொடர்மொழி யிலக்கணமே கூறிற்று என்றதும் பொருந்தாமை காண்க.

எனவே, 'கிளவி யாக்கம்' என்பதுபற்றி இளம்பூரணர் தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் இவர்கள் கூறிய உரைக் கருத்து முற்றும் பொருந்தாமை கண்டு கொள்க.

ஆகவே, வழூஉக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் கிளவியாக்கம் ஆயிற்று என்று சேனாவரையர் கூறியதே பொருளென்க. ஆண்டு அவர் சொற்கள் பொருண்மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவியாக்க மாயிற்றெனினும் அமையும் என்றது பிறன்கோட் கூறல். அதுவும், வினாப் பொருண்மே லாமாறு இது, செப்புப்பொருண்மே லாமாறு இது, ஐயப்பொருண்மே லாமாறிது, இயற்கைப்பொருள்மேல் ஆமாறிது, செயற்கைப் பொருண் மேலாமாறு இது அவ்வாறே பிறபொருண்மேல் ஆமாறு இது என்பதை உணர்த்திற் றென்னும் கருத்துப் பற்றியது போலும்.

பேராசிரியர்க்கும், வழுவமைக்கும் காரணத்தால் கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்றேன்பதே கருத்தாதல் 'மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளோடு' (பொருள். சூ-) என்பதன் உரையுள் அவர் கூறியவாற்றான் உணர்க. மேலும் அவர், 'வினையியலுட் கூறப்படும் இலக்கணத்தையே ('னஃ கானொற்றே ஆடூஉ வறிசொல்' முதலிய சூத்திர விலக்கணத்தை) ஆண்டு (கிளவியாக்கத்துள்) ஓர் உபகாரப்பட ஆசிரியர் கூறினார் என்றதும் கண்டுகொள்க.

தெய்வச்சிலையாருக்கும், கிளவி யாக்கம் என்னும் ஓத்து வழுவமைத்தலை முதலியதென்பது கருத்தாதல், இது இவ்வழு இது இவ்வழுவமைதி, இது வழா நிலையென்று அவர் அவ் வோத்தின் சூத்திர முதலிய பொருளைக் கூறுமுகத்தான் விளக்கினாரென்க.

இனிச் சிவஞான முனிவருக்கும் கிளவி யாக்கம் என்னும் ஒத்து நுதலியபொருள் வழுவமைதியே என்பது 'பொதுவியற் சூருவளியில் உரைத்தவாற்ருன் உணர்க. இனிப் பிறமொழி நூலாரும் வழுவமைதியை முன்னர்த் தனி ஒத்தால் கூறுமாறும் காண்க.

மறுப்பு 25.

(சூ. 1-குறிப்புரை.)

' அதிகாரம் என்பதன் பொருள் :—அதிகாரம் என்றசொற்கு உரையாசிரியரும் நச்சினூர்க்கினியரும் 'முறைமை' என்று பொருள் கூறினர். முறைமை என்பதற்கு விதியென்று பொருள்கொண்டனர்போலும்,' சேனவரையர் 'அதிகரணம்' என்று பொருள் கூறினர். அது தெளிவாய் விளங்குகிறது' என்ருர்.

முறைமை என்பதற்கு விதியென்பது பொருளென்று எந்த நூலாட்சியில் கண்டனரோ. 'முறைமை ஊழும் பாவமும் தன்மமும், முறையும் வாழும் வழியுமாம் என்ப.' 'கோசமும் பழமையும் ஊழும் கூட்டும், ஆர்ப்பும் முறைமையும் முறையெனலாகும்' என்பன பிங்கலம். 'ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதியென்பன ஒருபொருட் கிளவி' யென்று பரிமேலழகர் கூறியதனைக் குறிப்புரையாளர் பிழைத்துணர்ந்தனர்போலும்.

'ஊழ் என்பது இருவினைப்பயன், செய்தவனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி' என்ருர் பரிமேலழகர். ஆகவே இலக்கண நூல் ஆட்சியில், முறைமை யென்பதற்கு விதியென்பது பொருளாகாது. முறைமை என்பது வரிசை என்று பொருள்படும். இதனை 'அதிகார முறைமை' 'முறையின் வைப்பே' 'ஒத்து முறை வைப்பே.' 'செய்யுளாதலின் முறை பிறழக் கூறினர்' என்புழிக் காண்க. ஆகவே 'சொல்லதிகாரம்' 'எழுத்ததிகாரம்' என்புழி, அதிகாரம்—முறைமை எனப்பொருள் கூறிய உரையாசிரியர்க்கு, சொல்லின் வரிசை எழுத்தின் வரிசை என்பதே பொருளென்பதும், சொல்லின்

வரிசையையுடைய நூற்பகுதியையும் எழுத்தின் வரிசையை யுடைய நூற்பகுதியையும் குறித்தலால் அன்மொழித்தொகை யாமென்பதும் கருத்துப்போலும். இனி முறைமை என்ப தற்குக் கிழமை என்னும் பொருளும் உண்டு.

'முறைப் பெயர்க் கிளவி.' 'பொருட்டு முறை யாதியின்' என்புழிக் கண்டு கொள்க. அதிகாரம் என்னும் சொற்கும் கிழ மைப் பொருளுண்டு. இதனை 'ஒத்த காட்சி யுத்திவகை விரிப் பின்' என்னும் சூத்திரத்து 'அதிகார முறைமை' என்பது பற்றிப் பேராசிரியர் கூறிய உரையானும் உணர்க. எனவே, அதிகாரம், முறைமை, கிழமை, உரிமை, சம்பந்தம், என்பன ஒருபொருட் கிளவியாதல் அறியப்படும். படவே சொல்லதி காரம் என்பதற்கு 'சொல்லின் உரிமை' எனப்பொருள் கொள்ளின், அது அன்மொழித் தொகையாக அதனை ஓதும் படலத்தைக் குறிக்குமென்பது அவர் கருத்தெனினும் அமையும்.

இனிச் சேனவரையர் 'அதிகாரம்' என்ற சொற்கு 'அதி கரணம்' என்று பொருள் கூறினர் என்று குறிப்புரையாளர் கூறியது தவறு. அன்றியும், அதிகாரம் என்னும் வடசொற்குப் பொருள் கூறுவார் 'அதிகரணம்' என்னும் வடசொல்லே கூறுவது 'மயங்க வைத்தல்' என்னும் குற்றத்தின் பாற்படும். அன்றியும், சிவஞானபோத முதற் சூத்திரத்து அதிகரணப் பகுப் பைப்பற்றி, இலக்கணம் கூறிய விடத்தே, 'தன்னாற் கூறப் படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துக் கூறும் சித்தாந்தத் துணிபும், இயையும் என்னும் இவற்றிற்கு நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும்' என்று ஆசிரியர் சிவஞான முனிவர் கூறினர். ஆகவே 'அதிகரணம்' என்பது ஒரு சூத்திரத்தின் பகுதி பலவற்றுள் ஒன்றற்குப் பெயராதல் தெரிந்து கொள்ளப் படும். ஆகவே, ஒரு சூத்திரத்தின் ஒரு பகுதிக்குப் பெய ராகிய 'அதிகரணம்' என்பதைப் பல ஒத்துக்களின் தொகுதி யாகிய 'அதிகாரம்' என்பதன் பொருட்டென்றல் மாறுகொளக் கூறல் என்னும் குற்றத்தின் பாற்படும்.

இனிப், பிரயோக விவேக நூலார், 'இழியா 'அதிகரணந்' தான் 'இடமென்பர் ஏந்திழையே' என்று அதிகரணம் என்னும் சொல் இடப்பொருட்டாகிய ஏழாம் வேற்றுமையைக் குறிப்பதாக ஓதினர். ஆகவே 'அதிகரணம்' என்பது எவ் வாற்றானும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாம். "'வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்லாயின் இப்படிக்கூறல்வேண்டும்' 'வினைவேறு படாஅப் பலபொருளொருசொல்' லாயின் இப்படிக் கூறல்வேண்டும் என்று ஆசிரியர் விதி ஓதியுள்ளார், ஆகவே அவ்விதியை நோக்காது 'அதிகரணம்' என்றே கூறி யொழிந்த தும் வழுவாதல் அறிக. இனி அதிகாரம் என்னும் சொற்குச் சேனவரையர் கூறியபொருள் :—'அதிகாரம் என்னும் சொற்குப் பொருள் பலவுளவேனும், ஈண்டு அதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலிவரும் பல ஓத்தினது தொகுதியை. வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்று இயைதலையும் ஒன்றனது இலக்கணம் பற்றிவரும் பல சூத்திரத் தொகுதியையும் அதிகாரம் என்ப.' எ-து. எனவே, சேனவரையர் அதிகாரச் சொற்கு, குறிப்புரையாளர் குறித்தவாறு, அதிகரணம் என்று பொருள் கூறிற்றிலர் என்பது தெற்றென உணர்க.

இனி, அதிகாரம் என்பதன் பொருள்பற்றி ஆசிரியர் சிவஞான முனிவர் உரைத்தவாறு :—'எழுத்ததிகாரம் என்பது எழுத்தினது அதிகாரத்தை யுடையது என அன்மொழித் தொகையாய், அப்படலத்திற்குக் காரணக் குறியாயிற்று.'

'அதிகாரம் அதிகரித்தல்.' அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தன் இருந்துழியிருந்து தன் நில முழுதும் தன் ஆணையின் நடப்பச் செய்வதுபோல ஒருசொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல வோத்துக்களும் தன் பொருளே நுதலிவரச் செய்வது. ஒன்று, சென்று நடாத் தும் தண்டத் தலைவர்போல ஓரிடத்து நின்றசொல் பல சூத்திரங்களோடும் சென்றியைந்து தன் பொருளைப் பயப் பிப்பது. இவற்றிற்கு, 'வடநூலார் முறையே, யதோத்தேச பக்கம் எனவும் காரியகால பக்கம் எனவும் கூறுப. இது சேன வரையர் உரையானும் உணர்க. அவற்றுள் ஈண்டு அதிகாரம்

என்றது முன்னையது. அதனை உடையது எனவே, எழுத்தை நுதலிவரும் பல ஒத்தினது தொகுதி எழுத்ததிகாரமென்ற வாறாயிற்று. 'எழுத்தினது அதிகாரத்தை உடைய்து' என்புழி ஆறாவது வினைமுதற் பொருண்மையின் கண் வந்த காரகம்' எ-து.

'ஒரு நெறியின்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அதுபடல மாகும்.' என்னும் சூத்திரத்துரையுள் அதிகாரம் என்பதும் படலம் என்பதும் ஒரு பொருட் கிளவியாகப் பேராசிரியர் கூறியவாறும் அறிக. அப் பேராசிரியர், 'அதிகாரம் என்னும் பொருண்மை யென்னை யெனின், முறைமை யெனவும் கிழமை யெனவும் இட மெனவும் கொள்ளப்படும்' என்று 'ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பின்' என்ற சூத்திர வுரையுட் கூறியவாறும் உணர்க. இனி மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரும், 'அதிகாரம்' என்பது பல ஒத்துக்களின் தொகுதி யென்றும், அதுவே 'படலம்' என்றும் இறையனார் களவியல் உரையுட் கூறினார் என்க. இதனாலே ஒரு பொருணுதலிவரும் பல சூத்திரத் தொகுதியாகிய 'ஒத்தும்' 'அதிகாரம்' என்று வழங்குதற்கு ஏற்புடைத்தா மெனவும் அறிக.

இக் கருத்தானே போலும், தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் திருக்குறள் வகுப்பிற்கு 'அதிகாரம்' என்னும் குறியீடு கொடுத்தார். இதனாலே அதிகாரம் என்னும் சொல் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் நூல் வழக்கில் ஆளப்பட்டமை விளங்கும்.

ஆசிரியர் தோல்காப்பியனார், 'பொது மொழி கிளந்த படலத்தானும்' எனவும், 'ஒரு நெறியின்றி விரவிய பொருளால் பொது மொழி தொடரினதுபடல மாகும்' எனவும் வரும் சூத்திரங்களால் பல ஒத்துக்களின் தொகுதி 'படலம்' எனப்படும் என்று ஓதினாராகவும், அவரும் பிறரும் 'புறப்பொருட் பன்னிருபடலம்' என ஓர் நூல் செய்தாராகவும், ஈண்டு எழுத்துப்

படலம், சொற் படலம், பொருட் படலம் என்று குறியிடப் படாமல் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்னும் குறியிடப்பட்டதற்குக் காரணம் ஆராய்தல் வேண்டும்.

ஆசிரியரே யுத்திவகையுள் 'அதிகார முறைமை' என ஓதியதனுல் 'அதிகாரம்' என்பது 'காலம்' 'உலகம்' என் பனபோலத் தமிழ் மொழியினும் வடமொழியினும் ஒப்ப வழங் கும் சொல் எனவும், வடமொழியினும் வல்லுநராகிய பேராசிரி யர் 'அதிகாரமுறைமை' என்பதற்கு உரை கூறியவிடத்தே வடசொல் என்னுமையாலும், அது பல பொருள் ஒரு சொல் என்றதனுலும், அவர்க்கு அது தமிழ்மொழி யெனவும் கருத் துப்போலும் என்று கூறுவாரும் உளர். அதுவும் ஆராய்தற் பாற்று.

(தொடரும்.)

பரணர்.

திரு. வித்துவான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக் கலாசாலை, திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி. துணர். 7, பக்கம். 136.)

ஆசிரியர் பரணர் பாடிய பாட்டுக்களின் ஆராய்ச்சியைக் கூறுதற்கு எடுத்துக்கொண்ட யான், இதுகாறும், பண்டை நிகழ்ச்சி கூறல் என்ற பகுதியின்கீழ்ச் சேரன் செங்குட்டுவன் முதல் ஆதிமந்தி கணவன் ஆட்டனத்தியீருக வமைந்த அரசர், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலிய பலரது வரலாற்றினைப் பொதுப்படக் கூறி வந்தேன். இனி, அவர்களைத் தனித்தனியே இவர் சிறப்பித்திருக்கும் இயல்பினையும் அதனுற் பெறப்படும் இவரது புலமைத்திறனும் ஆராயப் புகுகின்றேன்.

1 சேரன் செங்குட்டுவன்.

இவன் சேரநாட்டிற் சிறந்து விளங்கிய மன்னர்களுள் ஒருவன் என்பதும், இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் என்பதும், கடவுட் பத்தினி யாகிய கண்ணகிக்குக் கல்நட வேண்டிக் கங்கைப் பேரியாறு கடந்து இமயமலையி லிருந்து கற்கொண்டு வந்தா னென்பதும், அதுபோது ஆரிய வரசர் பலரை வென்றா னென்பதும், பழையன் என்பா னொருவனை வென்று அவன் உரிமைமகளிர் கூந்தல் களைந்து கயிறு திரித்து, அவனது காவல் மரமாகிய வேம்பினைத் தடிந்து, யானை பூட்டிய ஒழுகையி (வண்டி) லேற்றிக் கட்டிக் கொணர்ந்தா னென்பதும், ஒரு காலத்தில் கடலும் பிறக்கிடுமாறு தன் வேலெறிந்து வெற்றி பெற்றா னென்பதும். பிறவும் மேலே கூறயப்பட்டன வாகலின் அவற்றை யினியும் விரித்துக் கூறாது மேற்செல்லுகின்றேன்.

இவனை, ஆசிரியர் பரணர், புறத்தில், "மீன்றொடுத்து நெற்குவைஇ," என்றும், "இருப்பு முகஞ் செறித்த வேந்தெழில் மருப்பின்," என்றும் தொடங்கும் இரண்டு பாட்டுக்களிலும், அகத்தில், "தாவில் நன்பொன் தைஇய பாவை" யென்று தொடங்கும் பாட்டிலும், பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்திலும் சிறப்பித்திருக்கின்றார்.

இவற்றுள், "மீன்றொடுத்து நெற்குவைஇ" என்று தொடங்கும் பாட்டு, இவனது வள்ளன்மை, முசுறி யென்னும் நகர்வளம் ஆகிய இரண்டும் முன்னர் உணர்த்திப் பின்னர் மகட்பாற்காஞ்சி யென்னும் புறத்திணைப் பொருளை யுணர்த்துகின்றது. இவன் தன்னை நாடிவரும் இரவலர்க்கும் பாவலர்க்கும் மலைபடு பொருள், கடல்படு பொருள் என்ற இருவகைப் பொருளும் கலந்து வழங்குவன் என்றும், அதுபோது அவர்கட்கு இனிமை மிக்க கள்ளினை நீர்போன் முகந்துண்ணத் தருவன் என்றும் கூறுவார்,

"மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்"

என்று கூறுகின்றார். பின்னர், அவனது முசுறி நகரத்தைச் சிறப்பிப்பார்,

" மீன்நொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலம்தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குந்து
....
முழங்குகடல் முழவின் முசுறி"

என்றார். எனவே, இந் நகர்வாழும் பரதவர் மனைதோறும் மீன் விற்றலால் மாறப்பட்டுக் கொணர்ந்த நெல் குவிக்கப் பெற்றிருத்தலும், அவ் வீடுகளி னருகே குவிக்கப்பெற்ற மிளகு பொதிகள் மிகுந்து கடற்கரைவரையிற் கலந்திருத்தலும், பிற நாடுகளிலிருந்து கலங்களாற் கொணரப்பட்ட பொன்னும் பொருளும் சிறு தோணிகளில், கழிகளின் வழியே கரை சேர்க்கப் படுதலும், எப்பொழுதும் மங்கல முழவு கடல்போன் றொலித்துக் கொண்டிருத்தலும் அம் முசுறிக்குச் சிறப்பென்றாராம். இதன்கண் மறுக்குந்து, கலக்குறுந்து, சேர்க்குந்து என்பவை மறுக்கும், கலக்குறும், சேர்க்கும் என்ற சொற்களே யாம். இவை 'உம்உந் தாகும் இட னுமா ருண்டே" (தொல். சொல்.) என்றதனால் இவ்வாறு நின்றன.

மீன் விற்று அவற்றிற்கு மாறாகக் கொண்ட நெல்லை மூட்டைகளாகக் கட்டி வீட்டின் முன்றிலில் அடுக்கிய தோற்றம் தோணியின் மேற்புறத்தை யொத்துக் காண்பாரைத் தோணியின் மேற்பக்க மென்றும், மனையக மென்றும் அறியக் கூடாவகை மயக்குதலால் " மனைமறுக்குந்து " என்றும்; பிற நாடுகட்குக் கலத்திற் கொண்டுபோதற் பொருட்டுக் குவிக்கப்பட்டுக் கடற்கரைவரைச் சாரையாய் அடுக்கப் பெற்றிருத்தலின், " கரைகலக்குறுந்து " என்றும், கடற்கரைக்கண் அலை மிக்குக் கரையொடு பொருதலால் தோணியைச் செலுத்துதல்

கூடாமையால், கடலிலிருந்து கரைப்பகுதிக்குள் கழி வெட்டி அவற்றின் வழியே தோணி செலுத்தின் தோணி இனிது கரை சேர்தலால், "கழித்தோணியால் கரைசேர்க்குந்து" என்றும் கூறினர்.

இப் பாட்டின் பிற்பகுதி,

"முழங்குகடல் முழவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலள் இவளெனத்
தந்தையும் கொடாஅன் ஆயின் வந்தோர்
வாய்ப்பட இறுத்த ஏணி ஆயிடை
வருந்தின்று கொல்லோ தானே பருந்துயிர்த்(து)
இடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங்(கு) ஆரிடை நெடுநல் ஊரே"

என்பது. இதன்பொருள், கடல்போன் றொலிக்கும் முழாவினை யுடைய முசுறி நகர் போலும் நன்மை யமைந்த சீரிய பொருளைக் கொணர்ந்து பணிவோடு விரும்பிக் கொடுப்பினும், இவள் தந்தை வந்தோர்க்கு, "இவள் ஒத்தவரல்லாத பிறரால் வரையப்படாள்" என்று கூறி மகட்கொடை மறுப்பா னாயின், வந்தோர் சினந்து வென்றி தப்பாதபடி படையொடு தங்கிய எல்லைக்கிடையே பருந்துகள் இடைமதிலிற் றங்கி யிளைப் பாறும் பெருமதிலும் பலவகைப் படைகள் விரவி யிருத்தலால் கடத்தற்கரிய வழியு முடைய நெடிய நல்ல ஊர் வருந்துவ தாகுங் கொல்லோ என்பதாம். எனவே, வருந்துவது புறத்துத் தங்கும் வந்தோர்படையே யென்பதாம். இக் கருத்தே, * "அந்தழை யல்குலும் ஆடமை மென்றோளும், பைந்தளிர் மேனியும் பாராட்டித்—தந்தை, புறமதில் வைகும் புலம்பே தருமே, மறமதில் மன்னன் மகள்" என்ற செய்யுளினும் அமைந்திருத்தல் காண்க. பலவகைப் படைகளாவன, † "வளை விற்பொறியு மயிற்செறி நிலையும், கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும், காய்பொன்

* பு-வெ-மாலை 123. † சிலப்-அடைக்-207-216.

னுலையும் கல்விடு கூடையும், தூண்டிலுந் துடக்கு மாண்டலை யடுப்புங், கவையும் கழுவும் புதையும் புழையு, மையவித் துலாமும் கைபெய ரூசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையு, மெழுவும் சிப்பு முழுவிறற் கணையமும், கோலும் குந்தமும் வேலும் சூலமும்" என்றிவை முதலிய பொறி களும் படைகளுமாம்.

இது மகட்பாற் காஞ்சி யென்னும் புறத்திணைப் பொருளை யுணர்த்துவதென முன்னர்க் கூறினேமன்றே. அஃதாவது, "நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்" எனத் தொல்காப்பியத்துட் கூறப்படுவது. இதன்பொருள், "பெண்கோள் ஒழுக்கத்தின் ஒத்து" மறுத்தல்பற்றிப் பகைவனுய் வலிந்து கோடற்கு, எடுத்துவந்த அரசனோடு, முதுகுடித் தலைவராகிய வாணிகரும் வேளாளரும், தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்" என்பது. (தொல். பொ. சூ. 79. உரை) மேலும், இவ் வுரையால் முதுகுடிமக்கள் தத்தம் மகளிரைப் படுத்தற்கு மறுப்பதன் காரணம் அரசரியல்பு தம் முயிரைப் பொருளெனப் போற்றாது வாழ்தலாகையால் அவர் நிலையின்மை நோக்கி அவர்கட்குத் தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சும் அச்சமேயாம் என்றும் முதுகுடிமக்க ளாகையால் அவரும் தம் மகளிர் மானங் கருதிப் பொருதுபடத் துணிந்தவ ரென்றும் அறியலாம்.

உருவும் திருவும் ஏனை நலனும் ஒத்தா லன்றி ஒருத்திக்கும் ஒருவற்கும் அன்புண்டாகாதாகலின், அது நலம்பெறும் விழுப்பொருள் பணிந்து உவந்து கொடுப்பினும் ஒவ்வா விடத்து ஆகாதென மறுப்பான், "நலஞ்சால் விழுப்பொருள் கொடுப்பினும், புரைய ரல்லோர் வரையலள் இவள்" என மகள்மேல் வைத்துக் கூறினன். முதுகுடிப்பிறந்தோர் தனம் சிறியராயினும் மனம் சிறியராகாமையின், தனக்கு வரும் ஏத மஞ்சாது மறுக்கின்றானாகலின், "தந்தையும் கொடான்" என்றார். "தந்தையும்" என்ற விடத்து உம்மை மகளே அம்மணத்தை மறுத்தமையை யுணர்த்திற்று. புரைய மன்ற புரையோர் கேண்மை"

என்பது போலப் (நற்....றிணை....) புரையோர் என்பது மேலோர் என்னும் பொருளை உணர்த்துவதாகக் கொள்ளின், மகள்கோடற் குரிய ராயினும் மகளுக் குரியவர் இயல்பு தம் மியல்போடு மாறுபடுத லறிந்தும் மகள் வேண்டல் பெரியோர் செயலன் றாகலின். "புரைய ரல்லோர் வரையலள் இவள்," என்றானெனினுமாம். வந்தோர் வலிந்து கோடற் கருத்தினராயின், அவரோடு பொருது உயிர்தந்தேனும் தன் மகளின் மானம் காக்க விரைகின்றா னாகலின், அவனை வந்தோரால் வெல்லலாகாது என்பார் "வருந்தின் று கொல்லோ தானே" யென்று கூறுகின்றார்.

இனி, "இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்" என்ற பாட்டு, செங்குட்டுவனது போர்ச்சிறப்பினை வேளாண் மாக்களது தொழிலோடு உவமித்துக் கூறும் பகுதியும், பரிசிற்பகுதியும் என இருபகுதியினை யுடையதாய் உருவக வணி சிறக்க நிற்கின்றது. உழவுத்தொழிலுக்கு இன்றியமையாத மேகமும், அது கருத்து மழை பெய்யுங் காலத்துச் செய்யும் மின்னலும், உடன்தோன்றும் இடிமுழக்கமும், மின்னி யிடித்து மழை பெய்யுங்கால் நாற்றிசையும் பரவிப் பொழியுமாறு வீசும் வளியும், இவற்றால் ஈரங்கொண்ட நிலமும், அதனை யுழுதற்கு வேண்டும் ஏரும், உழுதவழி யுண்டாகும் படைச்சாலும், அதன்கண் விதைக்கப்படும் வித்தும், அது விளைந்து முற்றிக் கதிர் தலைசாய நிற்றலும், அவற்றை யறுத்துப் போரிடுதலும் போல, போர்க்களத்திலும் கருங்கை யானை மேகமாக, மறவர் எறிதற்கு உயர்த்த வாள் மின்னலாக, போர் முரசு முழக்கமாக, மிக்க விரைந்த செலவினையுடைய குதிரை வீசுவளியாக, வல்வில் வீங்குநாண் செலுத்திய கணைகள் மழைத்தாரையாக, இவற்றாற் கொலையுண்ட மாக்களின் உதிரந் தோய்ந்து ஈரமுற்ற போர்க்களம் வயலாக, தேர் ஏராக, ஆயுதமாகிய படைவாளால் கீழ்மேலாக மறிக்கப்பட்ட படை முதலியவற்றின் நிரை படைச்சாலாக, வெள்வேலும் கணையமும் எறியப்பட்டுச் சிதறி வீழ்தலின் விதையாக, வீரர்

தம் தலைகளை வெட்டிச் சாய்த்த அச்சந் தரும் நிலை பைங் கூழாக, பேய்மகளிர் பிணமுண்பான் சூழ்ந்து வர, அவற்றைக் குவித்த குவை, போராக, அவற்றைப் பூதம், பேய், நரி முதலியவை முகந்துண்ணும் வகையிற்றான் தன்னைப் பாடி வருவோர்க்கு அவர் வேண்டுவன ஈதற்பொருட்டு வீற்றிருக் கின்றான் என்னும் பொருளமைந்து வருவது அவ் வேர்க்கள உருவகப்பகுதி. அது,

"இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை யானை கொண்மூ வாக,
நீள்மொழி மறவர் எறிவனர் உயர்த்த
வாள்மின் னாக, வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசு முழக்காக,
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக,
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர்ஏ ராக,
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதம் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள" என்பது.

இதன்கண், யானைகள் போர்செய்யுங்கால் அவற்றின் கோடு எதிர்த்தவரையும் எதிர்த்தவற்றையும் மண்டித் தாக் குங்கால் அது கூர்மடிந்து மழுங்காவகை நுனியிற் கூரிய இருப்புப்பூண் செறித்தல் மரபாகலின், "இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பு" என்றும், * "காலமாரியின் அம்புதைப் பினும், வயற்கெண்டையின் வேல்பிறழினும், பொலம்புனை

* புறம்-287.

யோடை யண்ணல் யானை, இலங்குவான் மருப்பின் நுதிமடுத் தூன்றினும், ஓடல் செல்லர்ப் பீடுடை யாள" ராகலின், வீரரை, "நீள்மொழி மறவர்" என்றும், போரிடைப் பெற்ற வெற்றிக்குறியாக முழக்கும் முரசத்திற்குக் குருதிபை வீரர் பலியிடுத லுண்மையின் "குருதிப் பலிய முரசு" என்றும், "விரிகிற நாகம் விடருள தேனும், உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்" (நாலடியார்) என்ப வாகலின், முரசொலி கேட்டஞ்சும் அரசரை அரவொடு உவமித்து, "அரசராப் பனிக்கும் அணுக்குறு பொழுது" என்றும், உழுதற்குச் செல்வோர் கடும்பகலிற் செல்லின் நிலம் வெதுப்புதற்கும், ஈரங் குன்றுதற்கும் அஞ்சி விடியலிற் செல்வா ராகலின் "விடியல் புக்கு" என்றும், விதை வித்துவோர் அதனைப் பிடியளவாகக் கொண்டு நீட்டி வீசுதலால், "பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி" என்றும் கூறினர். பாடு நர்க்கு என்பதில் நான்காவது "அதற்பொருட்டு".

இங்ஙனம், முற்பகுதியில் செங்குட்டுவனது போர்க்களத் தினைச் சிறப்பித்துக் கூறினவர், பின்னர்த் தான் விரும்பிக் கேட்கும் பரிசில்களைத் தருதல் வேண்டு மென்றற்குத் தோற் றுவாயாகப் பாடுநர்க்கு ஈதற்பொருட் டிருக்கும் பீடுடையோய் என்று தொடங்கி, பரிசில் வேண்டுகின்றார். வேண்டுபவர், "பெரும! அரிக்குரல்தடாரி யென்னும் பறை பலமுறை யடி படுதலால் சூடு பிறக்க, இசைத்து நின்புகழ் பாடி வந்தேன். ஆதலாலும், நீட்டியாது பரிசில் நல்கும் தகுதி விரும்புவோ யாதலாலும்,

"பாடான்று
எழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
ஓடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி"

என்று கூறுகின்றார்.

இப் பாட்டின்கண் முற்பகுதி சொல்லொழுக்கமும் பொருளொழுக்கமும் செவ்வனம் அமையப்பெற்றுப் படிப்போருளம் சுவைபெறச் செய்வது போலப், பிற்பகுதி யில்லை யாயினும், முற்பகுதியால் கவரப்பட்ட மனம் பின்னும் இழுக்கப்பெறின் கயப்புறு மென்று அஞ்சித் தாம் தம் வேண்டுகோள் கூறுதற் கமைவுடைத் தாக்கினமை இவரது புலமைத்திறனை வெளிப் படுக்கின்றது.

இனி, செங்குட்டுவனைப் பாராட்டிக் கூறும் அகப்பாட்டு, அகநானூற்றில் " தாவில் நன்பொன் தைஇய பாவை " என்று தொடங்குவது. இது அகத்திணைக்கண் வரும் அல்லகுறிப் பட்டு நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுதல் என்னும் துறைப்பொரு ளுணர்த்துகின்றது.

அல்லகுறிப்படுதலாவது, தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகுகின்ற காலத்து ஒருநாள் தலைமகன் செல்லாமே, அவனால் செய்யப்படும் குறிப்புக்கள் தாமே வெளிப்படுதல். " அக் குறிப்புக்கள் புன்னைக்காய் நீரி விடுதலும் புள் ளெழுப்புதலு மென இவை." இவை வெளிப்படுதற் குரிய காரணங்கள் இவனே யன்றி வேறும் உள. " புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் விழும், வளி எறியவும் விழும், புள் துளக்கவும் விழும்; புட்கள் எழுமிடத்து வெருவியும் எழும், வேற்றுப்புள் வரவும் எழும். இவை கண்டு, தலைமகனால் ஆயின வெனக்கொண்டு, குறியிடம் போந்து, அவனி னாகாமை யுணர்ந்து, (தலைமகள்) போந்து, மனையகம் புக்க பின்னை, அவன் (தலைமகன்) வந்து, அக்குறி செய்யும். செய்தக்கால், இரண்டாவதுகொண்டு போதல் ஆகா தன்றே, என்னை, சிறிது முன்னுகைப் போனாரன்றே. 'அகத் தினின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து நின்று பெயர்ந்தேம்' என்பதனை அவனுக்கு உணர்த்தும்; திங்கள்மே விட்டானும், அன்னத்தின்மே விட்டானும் ஓதத்தின்மே விட்டானும் கூறுவள். இஃதுணர்ந்து, தலைமகன், " இவ்விரவு இவர் என்பாலராய நின்று துயிலா ராயினர் போலும்; என்னை, தாம் துயிலாது நின்றாரன்றே துயிலாதன அறிவார். இவற்றின் துயிலெழ

(இவர்) வினையேன் குறியென்று வந்து பெயர்ந்தார் போலும்" என ஆற்றாது பெயர்வான். அக்காலை அவன் தன் நெஞ்சினை நெருங்கிக் கூறும் பகுதிகளுள் ஒன்றாகும் இத்துறை.

இங்ஙனம் அல்லகுறிப்பட்டு நீங்குந் தலைமகன் தலைமகளின் பெறுதற் கருமையும், நெருங்காவலை யுற்ற காப்பு மிகுதியும் நினைந்து வருந்துவான், நெஞ்சினை நெருங்கிக் கூறுகின்றான்.

" தாவில் நன்பொன் தைஇய பாவை
விண்டவ ழிளவெயில் கொண்டுநின் றன்ன
மிகுகவின் எய்திய தொகுகுரல் ஐம்பால்
கிளையரி நாணல் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்
நயவன் தைவரும் செவ்வழி நல்யாழ்
இசையோர்த் தன்ன வின்றீங் கிளவி
அணங்குசா லரிவையை நசைஇப் பெருங்களிற்(று)
இனம்படி நீரிற் கலங்கிய பொழுதில்,
பெறலருங் குரையள் என்னாய், வைகலும்
இன்னா அருஞ்சுரம் நீந்தி, நீயே
என்னை இன்னற் படுத்தினை, மின்னுவசிப்
புரவுக்கால் கடுப்ப * மறலிமைந் தூற்று
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇப்
படைநிலா விலங்கும் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென் றழுந்தக்
கூர்மத னழியரோ நெஞ்சே! ஆனாது

---

* வினையெச்சம். " மெலிவுகண் டேங்கு மாதோ விருப்பொடு மறலினாரே " (சிந்-968.) என்பதனால் வினையாதல் காண்க.

எளியள் அல்லோட் கருதி
விளியா வெவ்வம் தலைத்தந் தோயே''

என்பது அப் பாட்டு. இதன்கண் "தாவில் நன்பொன் தைஇய பாவை" என்பது முதல் "அணங்குசால் அரிவையை நசைஇ" என்பது ஈறாகக் கிடந்த பகுதி தலைமகளது தோற்றப் பொலிவையும், "மின்னுவசிப், புரவுக்கால் கடுப்ப மறலி மைந்துற்று" என்று தொடங்கி "ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய நீர்மாண் எஃகம்" என்பது வரையிற் கிடந்த பகுதி குட்டுவன் கடல் பிறக்கோட்டிய செய்தியையும், எஞ்சியது நெஞ்சினை நெருங்கிக் கூறுவதையும் உணர்த்துகின்றன.

தலைமகளின் தோற்றப்பொலிவு, ஓட்டற்ற நல்ல பொன்னாற் செய்யப்பட்ட பாவை விண்ணிற் றவழ்ந்து செல்லும் இளஞாயிற்றின் ஒளிகொண்டு நின்றது போல மிகுதிபடும் அழகு பெற்ற, தொக்க கதிர்போல் நீண்ட கூந்தலையும், கிளைத் தெழுந்த ஐம்மை பொருந்திய நாணற்கிழங்கினது மணலின் கண் ஈன்ற வெள்ளிய முளைபோற் கூரிய பற்கள் பொருந்திய பவளம் போன்ற வாயினையும், ஈரமுடையா னொருவன் இசைக்கும் செவ்வழிப் பண்ணுக்குரிய நல்ல யாழினது இசையைக் கேட்டாற்போலும் இனிய தீவிய மொழியினையு முடைய கண்டார்க்கு வருத்தம் விளைக்கும் அரிவை யெனக் கூறப் பட்டது. செங்குட்டுவன் கடல் பிறக்கோட்டியது, மின்னலோடு கூடிப் புரத்தற் கெழுந்த மேகங்களைச் சவட்டும் காற்றைப் போல், மாறுபட்டு வலியும் மிகப் பொருந்திப் பலவகை மொழிகள் விரவிய பாசறைகளை விரும்பிய விடங்களில் நிறுவி, படைகளின் ஒளி விளங்கும் கடல் போலும் தானையினையும், தேன் நெகிழ்ந்து சொரியும் மாலையினையும், மறம் பொருந்திய போரினையு முடைய செங்குட்டுவன் பொருதற்குரிய மாற்றுரைப் பெருமையால், நெறியினின்றும் பிறழ்கின்ற சினம் மிகுந்து, போர் செய்யும் வன்மையோடு கடலை முற்றுகை யிட்டு, எழுகின்ற அலை பொருந்திய கடல் விலகும் படிச் செலுத்திய மாட்சி பெற்ற நீர்மையினை யுடைய வேல் என்று விளக்கப்படுகின்றது.

இக்கூறிய தோற்றப்பொலிவினை யுடைய அரிவையைக் காதலித்து, அல்ல குறிப் பட்டமையால் அழுங்கும் நெஞ்சே! பெரிய யானைகளின் திரள்கள் வந்து படிதலால் கலக்கமுறும் நீர்போலக் கலங்கி நிற்கும் இப்பொழுதின்கண், "பெறுதற் கரியளாவாள்" என்று கருதாது, துன்பத்தைத் தரும் கடப்பதற் கரிய சுரங்கள் பல கடந்து வந்து என்னைத் துயர்க்குட் படுத்தினை. இங்ஙனம், கூடுதற் கெளியளல்லாதாளைக் கூடுதல் அரிதென்று கருதி யமையாது நீங்காத துன்பத்தையே மிகத் தந்தாய் ஆதலால், நீ, குட்டுவனது நீர்மாண் எஃகம் மார்பின் கட்புக்கு மூழ்க, நின் மிக்கவலி கெடுவாயாக எனவரும் இஃது இப்பாட்டின் கருப்பொருள்.

தலைமகட்குந் தனக்கும் அன்புமிகுதல் வேண்டி, விரைந்து வரையாது குறிவழி யொழுகுதலை மேற்கொண்டவன் வரும் வழியும் திரும்பச் சேறும் வழியும் அவளையே நினைந்து செல்கின்றானாகலின், அழுங்கும் பொழுதினும் நெஞ்சில் மிக்கு நின்ற அவளது உருவவியல்பினை முதற்கட் கூறி, அத்தோற்றம் நினைத்தபொழுதும் வருத்த மிகுவித்தலால் அவளை "அணங்குசா லரிவை" யென்றும் கூறினான். பின்னர், நெஞ்சிற்கு நெருங்கி யுரைப்பானாய், அதுபொழுது தான் கொண்டிருந்த நிலை விரைவில் தெளியும் தன்மைத் தல்லாத பெரிய கலக்கம் பொருந்திய நிலையாகும் என்பான் "பெருங்களிற்(று) இனம் படி நீரிற் கலங்கிய பொழுதில்" என்று கூறினான். முன்னர் இயற்கைப் புணர்ச்சிக்கண் அவளைக் கண்டபோது அவளது அழகு, என் அறிவு, நிறை, ஆண்மை முதலிய ஆண்மைக் குணங்களைக் கலக்கிக் கவர்ந்து கொண்டமையின், மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற்பாலையாய நீ, நின்னாற் காணப்படும் இவள், பெறுதற் கரியள் என்று கூறாது, இங்ஙனம் செலுத்தித் துன்புறுத்தினாய் எனச் சினந்தான்போற் கூறினான் எனினுமாம். அப்பெற்றியோன், சினத்தொழிலாகிய குட்டுவனது கடல்பிறக்கோட்டிய வேலைச் சிறப்பித்துப் பின்னர், இவ்வாறு எளிய ளல்லாதாளை எளியவள்போற் காட்டி நீங்காத் துன்பந்

தந்த நீ, எதனாலும் அடக்குதற் கியலாத கடலைத் தன் வேலாற் பிறக்கிடச் செய்த செங்குட்டுவனுடைய தப்பாத வேல் மார்பி லழுந்த நின், மிக்க வலி கெடுக என்று கூறினான்.

முதற்பகுதியும் நெஞ்சினை நெருங்கிக் கூறுவனவும், அல்ல குறிப்பட்டுத் தலைமகள் கூட்டம் பெறாமையால் ஆற்றாது அழுங்கிக் கூறுவன வாகலின், இது நெய்தற்றிணை யாயிற்று. பிற்பகுதியாகிய செங்குட்டுவன் செயல் கூறுவது, அவன் பொருமுரண் பெறாது, சினம் சிறந்து, "செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி," ஓங்குதிரை பிறக்கிடும்படி பொருதலைக் கூறுதலின் அது தும்பைத்திணை யாயிற்று. இத் தும்பைத்திணை அந் நெய்தற்றிணையின் புறமாகும். என்னை, "தும்பை தானே நெய்தலது புறனே" (தொல். பொ. 69.) என்ப. தும்பைத் திணை யென்பது "மைந்து பொருளாக வந்த வேந்தனை, சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப". (தொல். பொ. 70).

இனி, ஆசிரியர் பரணர் இச் செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தினுள் சிறப்பித்திருக்கின்றார் என்று முன்னர்க் கூறினோமன்றோ. அப் பத்தினையும் சிறிது ஆராய்கின்றோம்.

பதிற்றுப்பத்து என்னும் இந்நூலுள் ஒவ்வொரு பத்தினும் இறுதியில், பதிகங்கள் அமைந்து, பாடினோர், பாடப்பட்டோர்செயல், பாடினோர் பெற்ற பரிசில் ஆகிய இவற்றைக் கூறுகின்றன. இவற்றுள், ஐந்தாம் பத்தின் இறுதியிலுள்ள பதிகம், செங்குட்டுவன் செயலையும், பாடினோர் பரணர் என்பதையும் கூறிப் பின்னர்ப் பரணர் பாடிப் பெற்ற பரிசில் உம்பற் காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ" என்று கூறுகின்றது. மற்று அந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர் **உ. வே. சாமிநாதையரவர்கள்** முகவுரையில், "ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு, பெய ரென்பவைகள் உரையில்லாத மூலப் பிரதிகளி லெல்லா மிருத்தலின், அவை உரையாசிரியரால்

எழுதப்பட்டனவல்லவென்றும் நூலாசிரியர்களாலோ தொகுத்தாராலோ எழுதப்பட்டனவென்றும், பதிகங்கள் உரைப்பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றமையால் அவற்றை இயற்றினோர் நூலாசிரியரும் தொகுத்தோரும் அல்லரென்றும் தெரிகின்றன" என்று உரைத்தலின், நூலாசிரியரோ, தொகுத்தாரோ குறியாத செயலை உரையாசிரியரோ பிறரோ குறித்தல் எங்ஙனமமையுமென ஐயம் நிகழுமாயினும், குறித்தோர், கேள்விமாத்திரையாற் பெற்ற செய்தியாதல் கூடுமென் றெண்ணுகிறேன். இதற்கு விளக்கம் வேண்டும்.

(தொடரும்.)

பொழிலன்பர்கட்கு ஒருவேண்டுகோள்.

நமது பொழிலின் ஏழாம்துணரை, மலர்தோறும் ஒரு 'பாரம்' அதிகமாக்கி, அவ்வாறு பாரமாக, அச்சிட்டு வர விருப்பதை அன்பர்கட்குத் தெரிவித்துளோம். சில காலங்களில் கட்டுரையின்மை, அச்சுத்தாழ்வுகள் ஏற்பட்டுப் பொழிலை உரியகாலத்தினுள் வெளிவரவொட்டாது தடுத்தன. ஆனவரை உரிய காலத்தில் வெளிவந்துவிடச் செய்த முயற்சியால், சென்ற ஆவணியிலும் இந்தப் புரட்டாசியிலும், கூறியபடி அவ்வாறு பாரம் வெளியிட இயலாமை எய்திற்று; ஐவைந்து பாரங்கள் வெளியிடவே இயலுவதாயிற்று. எது எங்ஙனமாயினும், வழக்கம்போன்று ஐந்து பாரங்கட்கு ஒருபோதும் குறையாமல், அவ்வப்போது இயலும்வரையில் ஆறோ இன்னும் அதிகமாகவோ அச்சிட்டு வந்து, இவ்வாண்டின் இறுதிக்குள், முற்குறித்தபடி 72 பாரங்களையும் முடித்துவிட எண்ணியுள்ளோம். அன்பர்கள் இடையில் நிழுகம் தாழ்வுகளைப் பொறுத்தருள்வார்களாக.

பொழிற்றொண்டர், வே.